1986 மே 13

இணைப்பு

(....-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் எண் 757 (5285) க்கான விடையைக் காண்க).

1982–83-ஆம் ஆண்டில் பாசன வளம் பெருக்குதல், ஒருங்கிணைந்த ஊரக வுளர்ச்சித் திட்டம்: கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம், உபரி நிலம் பகிர்ந்தளித்தல், கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டம்: பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவியளித்தல், வீட்டு மனை ஒதுக்குதல்: குடிசை வாழ் மக்களுக்கு உதவி அளித்தல்: பொருளாதார வகையில் நலிவுற்றபிரிவினருக்கு வீடுகள் அளித்தல், மரம் நடுதல், கரிம வாயு நிலையம் அமைத்தல் சுகாதார துணை நிலையங்கள், சிறார் நல மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம், 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் சேர்த்தல், முதியோர்க் கல்வி, சிறு தொழில்கள் தொடங்குதல் ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தமிழ்நாடு மிஞ்சிவிட்டது.

1983–84-ல் தமிழ்நாடு பாசன வளம் பெருக்குதல், பயறு வகைகள் உற்பத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, ஒருங்கிணைந்த ஊரக வுளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம், உபரி நிலம் பகிர்ந்தளித்தல், கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவியளித்தல், குடிநீர் வழங்குதல். வீட்டு மனைகள் வழங்குதல், கட்டுமான உதவியளித்தல், மரம் நடுதல் கரிம வாயு நிலையம் அமைத்தல்: கருத்தடை அறுவை சிகிச்சை: ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல், சிறார் நல மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம், 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகள் சேர்த்தல், முதியோர்க் கல்வி ஆகியவற்றில் தமிழ்நாடு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சிவிட்டது.

1984–85-ல் பாசன வளம் பெருக்குதல், பயறு வகைகள் உற்பத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், உபரி நிலம் பகிர்ந்தளித்தல், கொத்தடிமை மறுவாழ்வு திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினர் குடும்பங்களுக்கு உதவியளித்தல், குடிநீர் வழங்குதல்: வீட்டு மனைகள் வழங்குதல், கட்டுமான உதவியளித்தல், குடிசை வாழ் மக்களுக்கு உதவியளித்தல், பொருளாதார வகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வீடுகள் அளித்தல், கிராமங்களுக்கு மின் இணைப்பு அளித்தல்,, விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளித்தல், மரம் நடுதல்: கரிம வாயு நிலையம் அமைத்தல், கருத்தடை அறுவை சிகிச்சை, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், சுகாதார துணை நிலையங்கள் அமைத்தல், 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகளைச் சேர்த்தல்: முதியோர்க் கல்வி சிறு தொழில் நிலையங்கள் அமைத்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விஞ்சியுள்ளது.